தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-1-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி

நாம் சாகுபடி செய்யும் பயிர்களில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் காரணிகளில் பூச்சிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சிமேலாண்மை தொழில்நுட்பங்கள் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் உயிரியல் முறை சார்ந்த பூச்சி கட்டுப்பாட்டை பயன்படுத்தப்படும் ஒட்டுண்ணிகள், இரை விழுங்கிகள், பூச்சிகளை அழிக்கவல்ல பாக்டீரியா மற்றும் நச்சுயிரிகள் பற்றிய தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் பயிர் சாகுபடி செய்யும் உழவர்கள், பண்ணை மகளிர், வீட்டுத் தோட்ட காய்கறி சாகுபடியாளர்கள் குறிப்பாக பெண்கள், தொழில் முனைவோர் மற்றும் இளைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இதனை கருத்தில் கொண்டு கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பயிர் பாதுகாப்பு மையத்தில் இயங்கும் பூச்சியியல் துறை சார்பாக "நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி" 2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் (செவ்வாய்கிழமை) காலை 9 மணியளவில் பூச்சியியல் துறை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சியில் பங்குபெற விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி எண்களை 0422-6611414 / 214 தொடர்பு கொண்டு ஜனவரி 27-ம் தேதிக்குள் முன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பயிற்சி பெறும் உறுப்பினர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சி நாளன்று பங்குபெறும் பயிற்சியாளர்களுக்கு இரு நேர தேனீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ. 750/-. இத்தொகையை பயிற்சி நாள் அன்று காலை செலுத்த வேண்டும்.

<u>மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பூச்சியியல் துறை,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்